ஆலங்குளம் சிமெண்ட் ஆலை.

*வினா எண் 660—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாபுரம் மாவட்டம் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் 1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் நாளில் ஏற்பட்ட ஒப்பந்தம் இன்னும் நடைமுறைக்கு வராமல் இருப்பதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இராமநாதபுரம் மாவட்டம் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் 1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் நாள் அன்று தொழிலாளர் நல தனித் துணை ஆணையர் முன்னிலையில் தொழில் தகராறு சட்டம் பிரிவு 12 (3)-ன்கீழ் ஏற்பட்ட ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு விட்டது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிமெண்ட் ஆலை அலுவலக ஊழியர்களுக்கு நடுவர் தீர்ப்பை ஆலை நிர்வாகம் எந்த முறையில் அமுல்படுத்தியது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி நடுவர் தீர்ப்பைப் பற்றியது அல்ல. ஏற்கனவே ஏற்பட்ட ஒப்பந்தம் 12 (3) பிரிவின்கீழ், அந்த ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு விட்டது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, ஒருதலைப்பட்சமாக, இருவிதமான கொள்கைகளை நிர்வாகம் கடைபிடிப்பதாக தொழிற் சங்கத்திடமிருந்து அரசுக்கு ஏதேனும் புகார் வந்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்பட்ட ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது என்ற செய்திதான் எங்களுக்கு வந்துள்ளதே தவிர. வேறு புகார் எதுவும் அரசுக்கு வரவில்லை.